செ. கு. எண்: 066 நாள்:30.04.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 30.4.2018

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், காடல்குடி கிராமம், விளாத்திகுளம் செல்லும் சாலையின் ஓரத்தில் உள்ள குப்பையாபிள்ளை ஊரணியில் **29.4.2018** அன்று குளிக்கச் சென்ற திரு. அய்யனார் என்பவரின் மகன்கள் செல்வன் கணேஸ்குமார், கவின்குமார் மற்றும் திரு. சந்தனம் என்பவரின் மகன் செல்வன் கவுதம் ஆகிய மூன்று பேரும் நீச்சல் தெரியாமல் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவர்கள் செல்வன் கணேஸ்குார், செல்வன் கவின்குமார் மற்றும் செல்வன் கவுதம் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த துயரச் சம்பவத்தில், உயிரிழந்த மூன்று மாணவர்களின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**